### பழமொழியாகமம் 31:10

வல்லமையுள்ள ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவனார்? தூரமாய்க் கடைகோடிகளினின்றாம் அவளு டைய விலைமதிப்பு.

### பழமொழியாகமம் 3:3-4

இரக்கமுஞ் சத்தியமும் உன்னை விட்டுவிடாதிருக்கும்; அவற்றை உன் கழுத்துக்கு (ஆரமாய்ச்) சூடு வாய்; உன் இருதயத்தில் பதியவைப் பாய். அப்போது நீ தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாகக் கிருபை யையும், நல்லறிவையுங் கண்டடை வாய்.

### இசாயாஸ் ஆகமம் 43:4

நமது கண்களுக்கு நீ கனமுற்ற தாயும், விலையேறப்பெற்றதாயும் ஆனது தொட்டு உன்னை விசேஷ விதமாய் நேசித்தோம்; உனக்காக மனிதரை (பிறர்) கையளிப்போம், உன் சீவனுக்காகச் சனங்களைப் போக்கடிப்போம்.

### இசாயாஸ் ஆகமம் 60:1

எருசலேமே! எழுத்திரு; உன் தீபம் வந்ததாலும், ஆண்டவருடைய மகிமை உன்பேரில் உதயமானதாலும், பிரகாச மயமாய் விளங்குவாயாக.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 6:26

ஆகாயப் பட்சிகளை நோக்கிப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறது மில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சி யங்களில் குவிக்கிறதுமில்லை . ஆகிலும் அவைகளை உங்கள் பரம பிதா போஷித்து வருகிறாரே. அவைகளிலும் நீங்கள் மிகவும் மேன்மையுள்ளவர்கள் அல்லவோ?

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 10:29-31

ஒரு காசுக்கு இரண்டு அடைக் கலங் குருவிகள் விற்கப்படுகிறதல் லவோ? ஆயினும் அவைகளில் ஒன்றா வது உங்கள் பிதாவின் சித்தமின்றித் தரையில் விழமாட்டாது. (லூக். 8:17.) உங்கள் சிரசின் ரோமங்களெல் லாம் எண்ணப்பட்டிருக்கின்றன. (அப். 27:34.) ஆதலால் அஞ்சாதிருங்கள்; அநே கம் அடைக்கலங் குருவிகளைவிட நீங்கள் மேலானவர்களாயிருக்கிறீர்கள்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 12:6-7

இரண்டு காசுக்கு ஐந்து அடைக்க லங்குருவிகள் விற்கிறதல்லவோ? ஆயி னும் அவைகளில் ஒன்றானாலும் சர்வேசுரனுடைய சமுகத்தில் மறக்கப்படுவதில்லை. உங்கள் தலை உரோமங்களெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றன; ஆகை யால் நீங்கள் அஞ்சவேண்டாம்; அநேகம் அடைக்கலங்குருவிகளைவிட நீங்கள் அதிகவிலையுள்ளவர்களாயிருக்கி றீர்கள். (லூக். 21:18)

அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:24

ஆயினும் அவைகளில் யாதொன் றிற்கும் நான் பயப்படுகிறதுமில்லை; என்னைப்பார்க்கிலும் என் உயிரைப் பெரிய காரியமாக எண்ணுகிறதுமில்லை. சர்வேசுரனுடைய கிருபையின் சுவிசேஷத்துக்குச் சாட்சியஞ் சொல்லும்படி ஆண்டவராகிய சேசுநாதரிடத்தில் நான் பெற்றுக்கொண்ட பிரசங்கத் தொழிலை யும் நிறைவேற்றி, என் ஷஜீவிய அயனத் தையும் முடிப்பேனாகில் அதுவே போதும்.

பழமொழியாகமம் 10:20

நீதிமானின் நாவு சுத்தப்படுத் தின வெள்ளியாம்; அக்கிரமிகளின் இருதயமோ ஒரு காசும் பெறாது.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 12:12

ஆட்டைப்பார்க்கிலும் மனிதன் எவ்வளவோ அதிக மேன்மையுள்ளவன். ஆதலால் ஓய்வு நாட்களிலே நன்மை செய்வது தகுமென்று சொன்னார்.

யாத்திராகமம் 19:5

ஆகையால் நீங்கள் நமது வாக்கைக் கேட்டு, நமது உடன்படிக்கையைக் கைக் கொண்டு அனுசரிப்பீர்களேயாகில் சகல ஷஜனங்களிலும் நீங்கள் நமக்கு அதிக பிரியமான ஆட்சியாயிருப்பீர்கள். ஏனெனில், பூமியெல்லாம் நம்முடையது.

கலாத்தியர் 5:6

ஏனெனில் கிறீஸ்து சேசுநாதரிடத்தில் சிநேகத்தினால் கிரியைகளைச் செய்யும் விசுவாசமேயன்றி, விருத்தசேதனமும் விருத்தசேதனமில் லாமையும் பிரயோசனப்படாது. (1 கொரி. 7:19; கலாத். 6:15.)